சட்டமன்றத்தில் வெறும் பாட்டுக்கச்சேரிதான் நடக்கிறது!

தாராபுரத்தில் உதயநிதி ஸ்டாலின் பரப்புரை.... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஃபோனில் போதைப் பவுடர். இதுவரைக்கும் நடவடிக்கை எடுக்கவில்லை, கேட்டால் தலைவலி மாத்திரை என்றார். திருட்டு வி.சி.டி. அமைச்சர். எல்லாருமே திருட்டு வி.சி.டி. விற்றவர்கள்தான். கடைசியாக, `திருட்டு லாட்டரி அமைச்சர்'. இதுதான் தமிழ்நாட்டினுடைய அமைச்சரவைப் பட்டியல்.

இவர்கள்தான் ஆட்சி அமைத்து, ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். கேட்டால் என்ன தெரியுமா கூறுவார்? `கொரியரின் உச்சத்தில் இருந்து வந்தேன்'. எப்போது கேட்டாலும், `கொரியரையே விட்டுவிட்டு வந்துவிட்டேன்' என்று கூறிவிட்டு இன்று தாராபுரத்தில் வாக்காளர்கள் ஒவ்வொருவருக்கும் `டிபன் கேரியர்' கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்! பணத்தை வைத்து டிபன் கேரியர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய முதலமைச்சர் என்ன தெரியுமா சொல்கிறார்.

"நாங்கள் எல்லாம் தூய்மையான ஆட்சி அமைத்திருக்கிறோம்". இது தூய்மையான ஆட்சி கிடையாது, துப்பினால் துடைத்துக் கொள்கின்ற ஆட்சி! அதைச் சொன்னது யார் என்று தெரியும் அல்லவா உங்களுக்கு? இப்போது அவர் அங்குதான் இருக்கிறார். நம்மோடு கொஞ்ச நாள் சுற்றிக் கொண்டு இருந்தார். இப்போது அங்குப் போய்விட்டார். ஏன் நான் சொல்கிறேன்?

இது தூய்மையான ஆட்சி கிடையாது, காறி உமிழ்ந்தால் துடைத்துக் கொள்கின்ற ஆட்சி என்று ஏன் சொல்கிறேன் தெரியுமா? ஆட்சி அமைந்த உடனே அவருடைய ஜோதிடர் ஒருவர் இருக்கிறார். அந்த ஜோதிடரை அரசு ஆலோசகராக வைத்துக் கொண்டார். எல்லாரும் காறி துப்பினார்கள், எதிர்க்கட்சிகள் எல்லாம் கேள்வி கேட்டார்கள், மக்கள் காறி துப்பியவுடன் அதை ரத்து செய்து விட்டார்.

துடைத்துக் கொள்கின்ற ஆட்சி!

அடுத்து இப்போது, `பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்டுவேன்' என்று சொன்னார், நான் ஏற்கனவே சொன்னேன் அல்லவா பீச் வியு. அதை மக்கள் இப்போது காறி உமிழ்ந்தவுடனே அதையும், ``இல்லை, நான் யோசித்துச் சொல்கிறேன்" என்று கூறிவிட்டார்.

நேற்று பார்த்தீர்கள் என்றால் மாநில நெடுஞ்சாலைகளிலெல்லாம் இந்தியில் எழுத ஆரம்பித்தார். மக்கள் எல்லாம் காறி இப்போது துப்பியவுடன், அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்.

`சட்டம்ஒழுங்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வராது' என்று நடுவில் ஓர் அரசாணை வெளியிட்டார்கள். மக்கள் அனைவரும் காறி துப்பியவுடன் இன்று அதையும் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். அதனால் தான் சொல்கிறேன், திரும்பத் திரும்பச் சொல்கிறேன், இது தூய ஆட்சி கிடையாது; காறி துப்பினால் துடைத்துக் கொள்கின்ற ஆட்சி.

இந்த ஆட்சிக்கு இன்னொரு முக்கியமான விஷயம். நான் இந்த முதலமைச்சருக்கு வைத்திருக்கிற செல்லப் பெயர் உங்களுக்குத் தெரியும். நம்பர் ஒன் ஓடுகாலி முதலமைச்சர். எதற்கும் பதில் சொல்லத் துப்பில்லை. சட்டமன்றத்தில் காவல்துறை மானியக் கோரிக்கையில் நான் பேசினேன், 40 நிமிடங்கள் பேசினேன், 18 கேள்விகள் கேட்டேன். கடந்த ஐந்து மாதங்களில் 500 படுகொலைகள் நடந்திருக்கின்றன. கடந்த ஐந்து மாதங்களில் கிட்டத்தட்ட 400 பாலியல் வன்கொடுமைகள் நடந்திருக்கின்றன. ஐந்து மாதங்களில் போதைப் பொருள் பழக்கம் எவ்வளவு உயர்ந்திருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் மேல் புகார் வந்திருக்கிறது, பாலியல் வன்கொடுமை, ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் சரவணன் அவருடைய பெயர், அவர் மேல் ஒரு பெண் புகார் கொடுத்திருக்கிறார், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எப்போது நடவடிக்கை எடுப்பீர்கள் என்று 18 கேள்விகள் கேட்டேன்.

அவர் ஓடிப்போய்விட்டார்!

வேகமாக முதலமைச்சர் எழுந்தார். நான் என்ன சொன்னேன் என்றால், மூன்று நாட்கள் கால அவகாசம் இருக்கிறது, நான் பேசியது வியாழக் கிழமை, மூன்று நாட்கள் விடுமுறை. முதலமைச்சர் மூன்று நாட்கள் சென்று ஆயத்தமாகிவிட்டு வாருங்கள், அரசு அதிகாரிகள் இருக்கிறார்கள் அவர்களிடம் கேளுங்கள் என்றவுடனே சபாநாயகர் உள்ளே வந்துவிட்டார். என்ன செய்தார்? "எதிர்க்கட்சித் தலைவர் இப்படி எல்லாம் பேசக்கூடாது, எங்கள் முதலமைச்சர் எப்போதுமே ஆயத்தமாகத்தான் இருப்பார்" என்றார்.

நான் கூறினேன், ``அப்படியா, ஆயத்தமாக இருக்கிறாரா, இப்போதே பதில் சொல்லச் சொல்லுங்கள், நான் உட்கார்ந்து கேட்கிறேன்" என்றேன். பயந்துவிட்டார். பயந்துவிட்டு, ``என்னடா இப்படி மாட்டி விடுகிறார்களே" என்று சொல்லிவிட்டு எழுந்தார் முதலமைச்சர். நான் கூட ``சரி, ஏதோ பேசப் போகிறார்" என்று நினைத்து உட்கார்ந்தேன். உட்கார்ந்து மேலே பார்க்கிறேன், ஆளைக் காணோம். உட்கார்ந்து கொண்டு எதிரே பார்க்கிறேன், காணோம்! ``நான் திங்கட்கிழமை வந்து பதில் சொல்கிறேன், யாரும் ஓடிவிடாதீர்கள்" என்று கூறி அவர் ஓடிப்போய்விட்டார்.

நடுவில் சேலத்திற்குச் சென்றார், உங்களுக்குத் தெரியும். சேலத்திற்குச் சென்று நம்முடைய மேட்டூர் அணையைத் திறந்து விட்டார். திறந்து விட்டு விட்டு என்ன செய்தார், அங்குப் போகின்ற வழியில் ஒரு பாட்டி இருந்தார். அந்தப் பாட்டிக்குக் கண்ணாடி மாட்டி விட்டார்., அது அப்படியே இருக்கட்டும்.

இப்போது முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் நம்முடைய தலைவர் கொண்டு வந்த திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரைக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் கொண்டு வந்தார். அந்தத் திட்டத்தை இவர்கள் பெயரை மாற்றி விட்டார்கள், விரிவாக்கம் செய்திருக்கிறார்கள், ஐந்தாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு என்று ஆக்கிவிட்டார்கள். அந்தத் திட்டத்தினுடைய துவக்க விழாவிற்கு முதலமைச்சர் செல்கிறார். ஒரு குழந்தையோடு உட்கார்ந்து சாப்பிடுகிறார், அந்தக் குழந்தைக்குச் சாப்பாடு ஊட்டிவிட்டார். அங்குப் பாட்டிக்குக் கண்ணாடி மாட்டி விட்டார், இங்குப் குழந்தைக்குச் சாப்பாடு ஊட்டி விட்டார். இப்போது அந்தப் பாட்டியும் பேட்டி கொடுத்துவிட்டார், இந்தக் குழந்தையும் பேட்டி கொடுத்துவிட்டது. பாட்டி 10 பேட்டி கொடுத்து விட்டார், குழந்தை ஒரு 10 பேட்டி கொடுத்துவிட்டது. ஆனால், முதலமைச்சர் இப்போது வரைக்கும் பத்திரிகையாளர்களைப் பார்த்தால் ஓடிப் போய்விடுகிறார். முதலமைச்சர் இப்போது வரைக்கும் ஒரு பேட்டி கூட கொடுத்தது இல்லை. அதனால்தான் சொல்கிறேன், நம்பர் ஒன் ஓடுகாலி முதலமைச்சர்.

பாடம் புகட்ட வேண்டும்!

சீப் மினிஸ்டர் இல்லை, சீட்டிங் மினிஸ்டர். நம்பர் ஒன் சீட்டிங் மினிஸ்டருக்கு இந்தத் தேர்தலில் ஒரு சரியான பாடத்தைப் புகட்ட வேண்டும் என்றால், தாராபுரத்தில் மீண்டும் உதயசூரியன் வெற்றி பெற்றுவிட்டது என்ற செய்தி 9ஆம் தேதி வர வேண்டும். அதை நீங்கள் செய்து காட்ட வேண்டும்.

இங்கு இருக்கக்கூடிய கழகத் தோழர்கள் நீங்கள் அத்தனை பேரும் முடிவு செய்துவிட்டீர்கள். வந்திருக்கக்கூடிய தாய்மார்கள், இந்தப் பகுதி வாக்காளப் பெருமக்களிடத்தில் நான் கேட்டுக்கொள்வது, வைக்கும் ஒரே வேண்டுகோள்: அடுத்து இரண்டு நாட்கள் இருக்கின்றன, 6ஆம் தேதி தேர்தல். நீங்கள் ஒவ்வொருவரும் பிரச்சாரம் செய்யுங்கள். 6ஆம் தேதி வாக்குச்சாவடிக்குச் சென்றீர்கள் என்றால், வாக்குப்பெட்டியில் மூன்றாவது இடம் சகோதரி சுகன்யாவின் பெயர் இருக்கும், பக்கத்தில் உதயசூரியன் சின்னம் இருக்கும். 6ஆம் தேதி மூன்றாவது இடத்தில் இருக்கும் பெயர், வாக்கு எண்ணிக்கையான 9ஆம் தேதி முதல் இடத்தில் வந்து உதயசூரியன் வெற்றி பெற்றுவிட்டது என்ற செய்தி வந்தாக வேண்டும்.

செய்து காட்ட வேண்டும் என்று உங்கள் எல்லோரையும் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவருடைய மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகப் பூரிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், டாக்டர் கலைஞருடைய பேரனாக இருந்து உதயசூரியன் சின்னத்தில் சுகன்யாவிற்கு வாக்களியுங்கள். உங்கள் அன்புக்கும் வர வேற்புக்கும் நன்றி.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

பங்கேற்றவர்கள்

கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஜ.பெரியசாமி, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், வெள்ளக்கோயில் சாமிநாதன், மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன், முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முன்னாள் அமைச்சர் சகோதரி கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தர்மபுரி மணி, ஈரோடு பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வஹாப், சீனிவாசன், ஜெயக்குமார், மாவட்டக் கழகச் செயலாளர்கள் காடுவெட்டி தியாகராஜன், வைரமணி, மேயர் அன்பழகன், வடக்கு மாவட்ட மாநகரப் பொறுப்பாளர் தங்கராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர் தனசேகர், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.ஆர்.எஸ்.செல்வம், கே.கே.சிவானந்தன், நகரமன்றத் தலைவர் பாப்பு கண்ணு, மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர் இன்பா ரகு, ஆனந்தகுமார், தாராபுரம் நகரக் கழகச் செயலாளர் முருகானந்தம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் யுவராஜ், மதியழகன், வில்சன் மணித்துரை, ஜெகனாதன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள் அருண்சுந்தர், கருப்பசாமி கோட்டையப்பன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் குகன் மற்றும் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.





மிசா காலத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மெய்க்காவலரும், என்றும் அவரது மனசாட்சியாகவும் விளங்கிய முரசொலி மாறன் வழிகாட்டுதல்படி உருவாக்கப்பட்டமாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத்தின் நிறுவனரும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நம்பிக்கைக்கும், போற்றுதலுக்குரியவருமான வி.எம்.ஆர். சபாபதி அவர்களின் பிறந்த நாள் விழா அச்சங்கத்தின் தலைமையகத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் பேரவைத் தலைவர் கி.நடராசன், பேரவை பொருளாளர் கோ.சி. வள்ளுவன், அலுவலகச் செயலாளர் ப.பன்னீர்செல்வம், பேரவை செயலாளர்கள் எம்.சண்முகம், ப.பன்னீர்செல்வம், சங்க முன்னாள் துணைத் தலைவர்கள் வாசுதேவன், பொன்மொழி, இணைப் பொதுச் செயலாளர்கள் ஜி.கே.மோகன், அ.ஆறுமுகம், வெங்கடேசன், இணைச் செயலாளர்கள் சாந்தன், குப்புசாமி, வேலாயுதம், கமலநாதன், கருப்பண்ணன், ஆட்டோ தொ.மு.ச. பாஷா பாபு, சங்க தலைவர் கோ.மோகன்குமார், பொதுச் செயலாளர் த.சரவணகுமார், பொருளாளர் கி.சீனிவாசன், மா.போ. கழக அலுவலக பணியாளர் சங்க பொதுச் செயலாளர் வி.மகேந்திரன், சங்க துணைத் தலைவர்கள், இணை பொது செயலாளர்கள், இணைச் செயலாளர்கள், பணிமனைச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் சங்க முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஊரான் வீட்டு நெய்யில் ஸ்வீட் செய்யாதீங்க...

அரசு நிதியில் தங்க மோதிரம் வழங்கிவிட்டு தாய்மாமன் என பெயர் வைப்பதா?

சீமான் ஆவேச பேச்சு!

திருப்பூர், அக். 6 - திருப்பூர் மாவட்டம் தாராபுரம் இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகாவை ஆதரித்து, நேற்று முன்தினம் அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் குண்டடம் பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது: பங்களாதேஷ், இலங்கையில் வந்த கிளர்ச்சி இங்கு வராது என யாரும் சொல்ல முடியாது. மக்களிடம் வாக்கு பெற எப்படியாவது கவர்ச்சி வாக்குறுதிகள்வழங்கப்படுகின்றன.

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம், அண்ணன் சீர் போன்றவை நிதிச் சுமையை ஏற்படுத்தும். இதுபோன்ற திட்டங்களால் அரசு பணியாளர்களுக்கு ஓய்வூதியம், பணிக்கொடை வழங்குவது பாதிக்கப்படும். சரியான பொருளாதாரக் கொள்கை இல்லாததால் நிதி நெருக்கடி ஏற்பட்டு, அரசு பணிகள் வழங்கப்படாமல் எல்லாம் ஒப்பந்த பணியாக மாறிவிடும். மேலும், அரசு கஜானா காலியாகும் சூழ்நிலை உருவாகும். பாட்டிலுக்கு பத்து ரூபாய் எனப் பாடியவர் இப்போது பாட மாட்டார், வாய்மூடி கிடக்கிறார்.

இப்போது பாட்டிலுக்கு 20 ரூபாய் வாங்கப்படுகிறது. லண்டன் சென்று 11 ஆயிரம் கோடி முதலீடு கொண்டு வந்துள்ளதாக கூறுகிறார். அதை இங்குள்ள மார்ட்டின், சிவ்நாடார் ஆகியோரிடம் கூறியிருந்தால் அவர்களே முதலீடு செய்திருப்பார்கள்.

இதற்கு எதுக்கு லண்டன் சென்றார் என தெரியவில்லை. விவசாயம் ஒரு தொழில் இல்லை.

பூமித்தாய் தனது பிள்ளைகளுக்கு தருவது தொழில் இல்லை. அது ஒரு கலாச்சாரம். அரிசி கிடைக்கவில்லை, தண்ணீர் கிடைக்கவில்லை என உனக்கு என்ன கவலை? படுத்துக்கொண்டு விசில் எடுத்து ஊது. "ஊரான் வீட்டு நெய் எடுத்து ஸ்வீட் செய்யாதீங்க" என்று கூறியவர், இப்போது ஏன் அரசு பணத்தில் செய்வதை அண்ணன் சீர், தாய்மாமன் மோதிரம் என பெயர் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? அரசு திட்டம் என்று தானே கூற வேண்டும்.

அவருக்கு 2 ஆண்டில் பொறுப்பு மிக்க பதவியை கொடுத்துவிட்டீர்கள். அவருக்கு என்ன செய்வது எனத்தெரியாமல் அங்கும், இங்கும் சுற்றிக்கொண்டிருக்கிறார். திட்டத்தைத் தொடங்கி வைக்க வருவதும், செல்வதும் தெரியக் கூடாது.

ஆனால், இங்கு 80 கி.மீ.க்கு பேரிகேடு வைத்து வந்து செல்வதா? பண அரசியலை ஒழித்து விட்டோம் என அவர் தான் சொன்னார்.

இப்போது அவர்தான் அதிகமாக கொடுக்கிறார் என செய்திகள் வருகின்றன. இவ்வாறு அவர் பேசினார்.

த.வெ.க. ஆட்சியில் சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு

தமிழ்நாட்டில் நேற்று ஒரே நாளில் 8 படுகொலைகள்!

4 வயது குழந்தை... 82 வயது மூதாட்டி உட்பட 8 பேர் படுகொலை!

சென்னை, அக். 6 - த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து குற்றச்சம்பவங்கள் நாளுக்கு நாளுக்கு அதிகரித்து வரும் நிலையில் நேற்று ஒரே நாளில் 8 படுகொலை சம்பவங்கள் அரங்கேறியுள்ளன. இதனால் பொதுமக்கள் அச்சத்திலும், பீதியிலும் உறைந்துள்ளனர்.

மதுரை மாவட்டம் திருமங்கலத்தில், 4 வயது சிறுவன் கடத்திச்சென்று கொடூரமாக கொலை செய்யப்பட்டது சாக்கு மூட்டையில் சிறுவனின் சடலம் மீட்கப்பட்டது.

மதுரை செக்கானூரணி அருகே பாறைப்பட்டியில் அஜித் எனும் 23 வயது இளைஞர் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டார்.

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே அன்வர் பாஷா என்ற கூலித் தொழிலாளி, வெள்ளாளப்பட்டி பஞ்சாயத்து அலுவலகம் முன்பு பட்டப்பக லில் பொதுமக்கள் கண்முன்னே படுகொலை செய்யப்பட்டார்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் சினிமா தியேட்டர் ஊழியர் ராஜா என்பவர், குடும்பத்தினர் முன்னிலையிலேயே முக மூடி கும்பலால் வெட்டிக்கொலை செய்யப் பட்டார்.

சென்னையை அடுத்த திருமுடிவாக்கத்தில் பிரிந்து சென்ற மனைவியை, சமாதானம் செய்யச்சென்ற அருண்பாண்டியன் என்பவர் வெட்டிக்கொலை செய்யப் பட்டார்.

நாகை மாவட்டம் கீழ் வேளூரை அடுத்த கூத்தூரில் அரைபவுன் நகைக்காக கமலாம்பாள் எனும் 82 வயது மூதாட்டி படுகொலை செய்யப் பட்டார்.

ஈரோடு மாவட்டம் லாகம்பாளையத்தில் ஆடு மேய்க்கச்சென்ற ஜானகி என்ற 39 வயது பெண் படுகொலை செய்யப்பட்டு, காட்டுப்பகுதியில் அவரது சடலம் மீட்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில், சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த சைலேஷ் என்ற தொழிலாளி கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டார்..

த.வெ.க. ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட குற்றச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்..

தேடப்படும் குற்றவாளியுடன்

மாட்டு வண்டியில் பயணம் செய்த முதல்வர் விஜய்!

அ.தி.மு.க. நிர்வாகியை மிரட்டி கட்சியில் சேர்த்த த.வெ.க.!

தாராபுரம், அக். 6 - காவல்துறையால் தேடப்படும் குற்றவாளியுடன் முதலமைச்சர் விஜய், மாட்டு வண்டியில் பயணம் செய்தது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர் சத்யபாமாவிற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட பொட்டிக்கம்பாளையத்தைச் சேர்ந்த அசோக் உள்ளிட்ட அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் மீது எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டது. அசோக் குடன் போராடிய மற்றவர்கள் கைது செய்யப் பட்டு சிறையில் உள்ளனர்.

த.வெ.க.வில் இணைய அசோக்கை அமைச்சர் ஒருவர் மிரட்டினார். இதனால் கைதுக்கு பயந்து த.வெ.க. விற்கு, ஜம்ப் ஆனார் அசோக். இதனால் அவரை மட்டும் விஜய் அரசின் ஏவல் துறை கைது செய்யவில்லை.

இந்த நிலையில் தாராபுரத்தில் முதலமைச்சர் விஜயின் ரோடு ஷோவின் போது அவருக்கு அசோக், மாட்டு வண்டி ஓட்டினார். முதலமைச்சர் வசமுள்ள காவல்துறையால் தேடப்படும் குற்றவாளி, அவர் அருகிலேயே அமர்ந்து மாட்டு வண்டி ஓட்டியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

பொய் வழக்குப் போட்டு மிரட்டு வதற்காகவே அமைச்சர் ஒருவரை த.வெ.க. அரசு நியமித்திருப்பதாக அ.தி.மு.க. குற்றம் சாட்டியுள்ளது.

சி.பி.ஐ., அமலாக்கத் துறை போன்ற விசாரணை அமைப்புகளை பூச்சாண்டி காட்டி எதிர்க்கட்சி நிர்வாகிகளை திருடுவதோடு, ஊழல்வாதிகளை புனிதராக்கும் பா.ஜ.க.வின், வாஷிங்மெஷின், பார்முலாவை, த.வெ.க.வும் பின்பற்றுவதற்கு கண்டனங்கள் குவிந்து வருகின்றன.

இதற்கு பேர் மாற்று அரசியல் அல்ல மானங் கெட்ட அரசியல். தூய சக்தி இல்லை துர்நாற்ற சக்தி என சமூக வலைதளத்தில் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறது.

டெல்லியில் சி.ஜே.பி. போராட்டம்!

3 பெண் பத்திரிகையாளர்களிடம் அத்து மீறிய போலீசார்!

டெல்லி, அக். 6 - தலைமைத் தேர்தல் ஞானேஷ்குமார் பதவி விலக வலியுறுத்தி டெல்லியில்நடைபெற்ற போராட்டத்தில், பெண் பத்திரிகையாளர்கள் மூவருக்கு போலீசார் பாலியல் தொல்லை அளித்ததாக குற்றச்சாட்டு எழுந்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிறப்பு தீவிர திருத்தப் பணி என்னும் எஸ்.ஐ.ஆர். மூலம் நாடு முழுவதும் ஏராளமான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையர்கள் இடையே ஒருமித்த கருத்து இல்லாத நிலையில், எப்படி சிறப்பு தீவிர திருத்தப்பணி மேற்கொள்ளப்பட்டது என்றும், இந்த முறை கேட்டிற்கு பொறுப்பேற்று தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வலியுறுத்தி மும்பையில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி சார்பிலும், டெல்லியில் அகில இந்திய மாணவர் சங்கத்தினர் சார்பிலும் நேற்று போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்தின்போது, டெல்லி போலீசார் பாலியல் ரீதியாக தங்களை துன்புறுத்தியதாக பெண் பத்திரிகையாளர்கள் 3 பேர் பரபரப்பு குற்றச்சாட்டுகளைமுன்வைத்துள்ளனர்.

இந்த குற்றச்சாட்டு தொடர்பாக டெல்லி காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

டெல்லி போலீசாரின் இந்த செயலுக்கு, இந்திய பிரஸ் கிளப் கண்டனம் தெரிவித்துள்ளது.

போராட்ட செய்தியை சேகரிக்கும் பணியில் இருந்த பெண் பத்திரிகையாளர்களை போலீசார் நடத்திய விதம் அதிர்ச்சி அளிக்கிறது என்றும், இந்த புகார் மீது, டெல்லி போலீசார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்திய பிரஸ் கிளப் வலியுறுத்தியுள்ளது.